No. of Printed Pages : **4**

**7491**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# Part III — Vocational Subjects

# வேளாண் அறிவியல்

# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** __________ என்பது அறுவடையைக் குறிக்கும்.

(அ) பூத்தல் (ஆ) வளர்ச்சி (இ) வாடல் (ஈ) முதிர்ச்சி

**2.** முந்திரி __________ குடும்பத்தைச் சேர்ந்தது.

(அ) மியூசேசியே (ஆ) தீயேசியே

(இ) கோல்சிகேசியே (ஈ) அனகார்டியேசியே

**3.** குறைந்த இடத்தில் அதிக வருமானத்தைத் தரக்கூடிய வேளாண் உபதொழில் __________.

(அ) காளான் வளர்ப்பு (ஆ) ஆடு வளர்ப்பு

(இ) பயிர் சாகுபடி (ஈ) வேளாண் காடுகள் வளர்ப்பு

[ திருப்புக

4. வளிமண்டல தழைச் சத்தை, வேர் முடிச்சுகளில் நிலை நிறுத்தச் செய்யும் பாக்டீரியா __________.

(அ) பேசில்லஸ் (ஆ) அசோஸ்பைரில்லம்

(இ) ரைசோபியம் (ஈ) அசட்டோபாக்டர்

5. நெல் குருத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்தும் முட்டை ஒட்டுண்ணி :

(அ) ஐசோடிமா (ஆ) பிரகானிட்

(இ) புள்ளி வண்டு (ஈ) டிரைகோகிரம்மா

6. இந்தியாவில் அங்கக வேளாண்மை செய்யப்படும் பரப்பளவில் __________ முன்னிலை வகிக்கிறது.

(அ) மத்திய பிரதேசம் (ஆ) குஜராத்

(இ) அசாம் (ஈ) ஆந்திரப் பிரதேசம்

7. விதை உற்பத்திக்கு __________ மூலமாகும்.

(அ) சான்றளிக்கப்பட்ட விதை (ஆ) ஆதார விதை

(இ) வல்லுனர் விதை (ஈ) கருவிதை

8. இந்தியாவின் இரண்டாம் பசுமைப் புரட்சி என்பது __________.

(அ) தேனீ வளர்ப்பு (ஆ) ஒருங்கிணைந்த பண்ணையம்

(இ) நானோ தொழில்நுட்பம் (ஈ) துல்லிய பண்ணையம்

9. நெல் புகையான் எதிர்ப்புத்திறன் கொண்ட இரகம் __________.

(அ) ADT 30 (ஆ) PY 3 (இ) TKM 6 (ஈ) ADT 25

10. தாவர பாகங்களின் மூலம் இனவிருத்தி செய்வதற்கு __________ என்று பெயர்.

(அ) பாலிலா இனப்பெருக்கம் (ஆ) பயிர் பெருக்கம்

(இ) பாலினப் பெருக்கம் (ஈ) இவை அனைத்தும்

11. உழவிற்கு உறுதுணை செய்யும் தேவதைகள் __________ ஆகும்.

(அ) தேனீக்கள் (ஆ) பட்டுப்புழு (இ) குளவிகள் (ஈ) மண்புழு

12. ஓர் எக்டருக்குத் தேவையான இரு பரு கரும்புக் கரணைகளின் அளவு __________.

(அ) 50,000 (ஆ) 1,50,000 (இ) 25,000 (ஈ) 75,000

13. மூலதனச் சந்தையில் __________ விற்கப்படும்.
(அ) பங்குகள் (ஆ) உரம்
(இ) விளைபொருள் (ஈ) விதை

14. ஆடுகளின் நரம்பு மண்டலத்தைத் தாக்கும் நோய் __________ ஆகும்.
(அ) வெக்கை சார்பு (ஆ) கோமாரி
(இ) ஆட்டு அம்மை (ஈ) துள்ளுமாரி

15. மனிதனின் புதியதொரு இன்றியமையாத் தேவை __________.
(அ) இருப்பிடம் (ஆ) உணவு (இ) தகவல் (ஈ) உடை

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

16. திட்டமிடல் என்றால் என்ன ?

17. பருத்தி நுனிகிள்ளுதல் பற்றி குறிப்பு வரைக.

18. ‘மா’ -வின் பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

19. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு என்றால் என்ன ?

20. அங்ககச் சான்றிதழ் என்றால் என்ன ?

21. ஒருங்கிணைந்த பண்ணையத்தின் அடிப்படைத் தத்துவம் யாது ?

22. நுண்ணுயிர் உரங்கள் – குறிப்பு வரைக.

23. வேலையாள் தேனீக்களின் பணிகள் யாவை ?

24. பதப்படுத்துதல் என்றால் என்ன ?

25. ஆயுஷ் மார்க் பற்றி குறிப்பு வரைக.

26. கால்நடைகளைத் தாக்கும் நோய்களின் வகைகள் யாவை ?

[ திருப்புக

27. தகவல் தொடர்பியல் தொழில்நுட்பம் என்றால் என்ன ?

28. இந்திய (நாட்டு) மாட்டினங்கள் எவையேனும் மூன்றினை குறிப்பிடுக.

## பகுதி - III

**குறிப்பு :** **எவையேனும் 5** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

29. வளர்ச்சி சீராக்கிகள் பற்றி எழுதுக.

30. செங்குத்து தோட்டத்தின் நன்மைகள் யாவை ?

31. பயிர் பாதுகாப்பில் ஏதேனும் ஐந்து சாகுபடி முறைகளை எழுதுக.

32. குறிப்பு வரைக :

(அ) பால் பண்ணை (ஆ) பயிர் சாகுபடி

33. விதை ஆய்வாளரின் பணிகள் யாவை ?

34. காளான் வளர்ப்பின் நன்மைகள் யாவை ?

35. வாழைக்கன்று தேர்வு மற்றும் கன்று நேர்த்தி முறைகளை எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு :** கீழ்கண்ட வினாக்களுக்கு **இரண்டு பக்க அளவில்** விடையளிக்கவும். **2x10=20**

36. (அ) உளுந்து இரக விதை உற்பத்தியை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) நறுமணப் பயிர் ஒன்றின் சாகுபடி செய்யும் முறையை விவரிக்கவும்.

37. (அ) ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் இயந்திர முறைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) உனக்கு தெரிந்த சேமிப்புக் கிடங்கு பராமரிப்பு முறைகளைப் பற்றி எழுதுக.

- o O o -